# ‘திராவிட மாடல்’ நாயகர் ஆட்சியில் வளர்ச்சிப் பாதையில் சிவகங்கை மாவட்டம்!

தமிழக முதல்வராக கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 3 அரை ஆண்டுகளை கடந்து தமிழகம் முன்னேற்ற பாதையில் சென்று உள்ளது. இந்தியாவில் சிறந்த நம்பர் 1 முதல்வர் என்று நமது முதல்வர் அனைவராலும் அழைக்கப்படுகிறார். ஆனால் அவர் அதை விரும்பவில்லை. தமிழகம் இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக மாற வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதற்கு ஏற்ப திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தி வருகிறார். அவர் பதவியேற்ற நாள் முதல் இன்று வரை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறார்.

பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, எண்ணங்களை, லட்சியங்களை, தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றினார். அவரது வழியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் வழியில் நமது முதல்வர் அவர்கள் அவர்களது எண்ணங்களை செயல்களை செயல்படுத்தி வருகிறார். அனைத்து அமைச்சர்களையும் மக்கள் பணி தீவிரமாக ஆற்றிட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். கல்வித்துறை, மருத்துவத் துறையினை தனது இரண்டு கண்களாக பாவித்து வருகிறார். தமிழகம் முழுவதும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் செயல்படுத்தபட்டு வருகிறது. இத்திட்டத்தில் மக்கள் தினசரி பயன் அடைந்து வருகிறார்கள். தமிழகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் தினசரி முதல்வரின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எல்லோருக்கும் எல்லாம் என்பதே ‘திராவிட மாடல்’ ஆட்சியின் கொள்கையாகும். அதை முழு அளவில் நிறைவேற்ற திட்டமிட்டு முதல்வர்கள் உழைத்து வருகிறார். தலைவர் கலைஞர் அவர்கள் நமது முதல்வரிடம் பிடித்தது என்ன என்று கேட்டதற்கு உழைப்பு, உழைப்பு, உழைப்பு, என்று பாராட்டினார். அந்த பாராட்டினை இன்று வரை முதல்வர் அவர்கள் கழகத் தலைவர் கலைஞரின் கட்டளையாக ஏற்று உழைப்பையே தனது மூலதனமாகக் கொண்டு மக்கள் பணியாற்றி வருகிறார்.

முதல்வர் ஆட்சியில் சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவைகள் முடிவடைந்துள்ளது. மக்களிடம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஏராளமான திட்டங்கள் இருந்தாலும் முத்தான பல திட்டங்களை மட்டும் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

1. காரைக்குடியில் ரூபாய் 100.45 கோடியில் புதிதாக சட்டக் கல்லூரி துவக்கப்பட்டு ஓர் ஆண்டாகிறது. இதில் ஏராளமான வழக்கறிஞர்கள் உருவாகி வருகிறார்கள். 2.செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 58 கோடி மதிப்பிலான கட்டிடப் பணிகள் முடிந்து துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு முத்தாய்ப்பாக கீழடியில் பண்டைய கால தமிழர்களின் நாகரிகத்தை வெளிப்படுத்தும் வகையில் ரூபாய் 18.43 கோடியில் செட்டிநாடு கலை வடிவத்தில் கட்டப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்தினை முதல்வர்அவர்கள் கீழடிக்கு நேரடியாக வந்து திறந்து வைத்தது நமது மாவட்டத்திற்கு மிகவும் பெருமை உடையதாகும். மாவட்ட மக்களால் பெருமைப்படக்கூடிய பாராட்டக்கூடியதாக உள்ளது.

இன்று கீழடியில் அருங்காட்சியகம் அமைந்ததால் உலக அளவில் தமிழர்களின் நாகரிகம் 3000 ஆண்டுகளுக்கு முன்பாக எவ்வாறு இருந்தது, தமிழர்களின் வாழ்க்கை முறைகள், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை இந்த அருங்காட்சியகத்தின் வாயிலாக அனைவரும் தெரிந்து கொள்ள முடிகிறது. தினசரி கீழடி அருங்காட்சியகத்தை பார்வையிட கல்லூரி, பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் அண்டை மாநிலத்தினர் வெளிநாட்டினர் தினசரி வந்து செல்கிறார்கள். கீழடி அருங்காட்சியகம் தமிழர்களின் நாகரிகத்தை பறைசாற்றும் வகையில் சுற்றுலா மையமாக மாறி வருகிறது.

முதல்வரின் புதிய வேளாண் காடு வளர்ப்பு திட்டத்திற்கு இதுவரை 45 91 விவசாயிகளுக்கு 34 700 மரக்கன்றுகள் ரூபாய் 110.25 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது இதன் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் வனப்பரப்பு அதிகரிக்கும். முதல்வரின் முத்தான காலை சிற்றுண்டி திட்டத்தினால் மாவட்டத்தில் 29 ஒன்றிய நகர பகுதியில் உள்ள பள்ளிகளில் சுமார் 40 ஆயிரம் மாணவ மாணவியர்கள் தினசரி பயன்பெறுகிறார்கள் . இத்திட்டம் மக்கள் நேரடியாக பயன் பெறும் திட்டமாகும். ‘வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடியதாக’ வள்ளலார் கூறுவார் ஆனால் நமது முதல்வர் பசியால் வாடிய பள்ளி மாணவ - மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி தந்த வள்ளலாராக விளங்கி வருகிறார்.

இதேபோல் மாதந்தோறும் ரூபாய் 1000 வழங்கும் ‘புதுமைப்பெண்’ திட்டத்தினால் இரண்டு ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான மாணவ - மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த திட்டங்களினால் கிராமப்புறத்தில் உள்ள ஏழை எளிய விவசாயிகளின் மகன், மகள்கள் உயர் கல்வி படிக்க வாய்ப்பு அமைந்துள்ளது. இதனால் அந்த கிராமமும் அதை சுற்றியுள்ள பகுதிகளும் கல்வி வளர்ச்சியுடன் பொருளாதாரத்திலும் வளர்ச்சி பெறும். இது ஒரு தொலைநோக்குடைய சமூகப் புரட்சி திட்டமாகும்.



**கே.ஆர்.பெரியகருப்பன்**
கூட்டுறவுத்துறை
அமைச்சர்
சிவகங்கை மாவட்டக்
கழகச் செயலாளர்

தலைவர் கலைஞரால் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு திட்டம் இன்று விரிவாக்கப்பட்டு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் கடன்கள் தமிழக முதல்வர் ஆலோசனையின் படி துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப் பட்டு வருகின்றது. இதனால் கிராமப்புறத்தில் உள்ள பெண்களின் வாழ்வாதாரம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு துறை மூலம் பல்வேறு வகையான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக கிராமப்புறத்தில் உள்ள ஏழை எளிய விவசாயிகள் கூட்டுறவு துறை மூலம் மிகவும் பயனடைந்து வருகிறார்கள். இவர்களால் எளிதாக அங்குள்ள கூட்டுறவு வங்கிக்கு சென்று கடன் பெற முடிகிறது. ஜாமீன் இல்லா கடன் வழங்கப்பட்டு வருகின்றது. பல்வேறு சிறு, குறு தொழில்களுக்கு கூட்டுறவு துறை மூலம் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. 5 கிராம் தங்க நகை அடகு வைத்திருந்தவர்களுக்கு வட்டி யுடன் பல்லாயிரக்கணக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு அவர்களின் நகைகள் அவர்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் நாட்டின் சுதந்திரத்திற்காக நடைபெற்ற சுதந்திர போராட்டத்தில் அதிகமான அளவில் பங்கேற்ற மாவட்டமாகும். சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றவர்களை நினைவுகூறும் வகையில் அவர்களை மதிக்கும் வகையிலும் எதிர்கால சந்ததியினர் அவர்களது வரலாற்றினை தெரிந்து கொள்ளும் வகையிலும் பல்வேறு திட்டங்களை முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். சிவகங்கை ராணி வேலுநாச்சியாரின் படைத்தளபதியாக இருந்த குயிலிக்கு ரூபாய் 50 லட்சத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்திற்கு நகரம் பட்டியில் ரூபாய் 50 லட்சத்தில் சிலையுடன் கூடிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மாமன்னர் மருது பாண்டியர்கள் சகோதரர்களுக்கு அவர்கள் ஆட்சி புரிந்த சிவகங்கையில் சிலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பணிவுடன் ஏற்று ரூபாய் ஒரு கோடியே 6 லட்சத்தில் சிலைகள் மண்டபம் அமைக்கப்பட உள்ளது. திருப்பத்தூர் தாலுகா சிறாவயல் கிராமத்தில் கம்யூனிஸ்ட் இயக்க மூத்த தலைவர் தோழர் ஜீவா ஆசிரியராக பணியாற்றியபோது அண்ணல் காந்தியடிகள் அவரை சந்தித்து அவருடன் அளவளாவிய இடத்தில் ரூபாய் 3 கோடியில் மண்டபம் கட்டப்பட்டு வருகின்றது. மாமன்னர் மருதுபாண்டியர்கள் போர் பயிற்சி பெற்ற சக்கரவதிக்கோட்டை பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு இவர்களை மதிப்பதன் மூலம் வருங்கால சந்ததியினர் இவர்களின் போர் ஆற்றல், அவர்களது வரலாறுகளை தெரிந்து கொள்ள முடியும்.

மானாமதுரை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. காரைக்குடி நகராட்சி மாநகராட்சியாக உருவானது. காளையார்கோவில் ஊராட்சி பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. நாட்டார் கால்வாய் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. சிவகங்கை பகுதி விவசாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஷீல்டு கால்வாய் திட்டம் விஸ்தரிப்பு. பணி நடைபெற உள்ளது. மானாமதுரையில் புதிதாக ஐ.டி.ஐ. கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது. சிவகங்கை நகராட்சியை தரம் உயர்த்திடும் வகையில் வாணியங்குடி காஞ்சிரங்கால் ஊராட்சிகள் இணைக்கப்பட உள்ளது. இவ்வாறு சிவகங்கை மாவட்டத்திற்கு கழக ஆட்சி வரும்போதெல்லாம் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறட்சியான பின்தங்கிய மாவட்டம் என்று அழைக்கப்பட்டு வந்த சிவகங்கை மாவட்டம் அந்த அவப்பெயர் நீங்கி முதல்வரின் பொற்கால ஆட்சியில் வளம் நிறைந்த மாவட்டமாக மாறி வருகிறது. மாவட்டத்தில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் ஓரளவுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது .இன்னும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

இத்தகைய நிலையில் தமிழக முதல்வர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களை துவக்கி வைத்தும், முடிவுற்ற திட்டங்களை துவக்கிட உள்ளார்கள். சுமார் 50,000 பயனாளிகளுக்கு பல்வேறுஅரசுத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மக்கள் பணியாற்றுவதற்காக வருகை தந்துள்ளார். மக்கள் பணியே மகேசன் பணி என்று அல்லும் பகலும் நமக்காக அயராதுஉழைத்திடும் முதல்வர் அவர்களுக்கு சிவகங்கை மாவட்ட மக்கள் தொடர்ந்து தங்களது ஆதரவினை முழு அளவில் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்து மறைந்த

# 2 வணிகர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் குடும்ப நலநிதி!

## அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்!

*சென்னை, ஜன. 23 -* வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்து மறைந்த இரண்டு வணிகர்களின் குடும்பத்தினர்களுக்கு குடும்ப நல நிதி உதவியாக தலா ரூ.3,00,000-க்கான காசோலைகளை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி மூர்த்தி, வழங்கினார்:

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமையில் நேற்று முன்தினம் (21.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத் துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மறைந்த இரண்டு வணிகர்களின் குடும்பத்தினரான திருத்துறைப்பூண்டியைச் சார்ந்த திருமதி. ரா.பவானி மற்றும் சேலத்தை சார்ந்த திருமதி. மே.உஷா ஆகியோருக்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியம் சார்பாக குடும்ப நல நிதி உதவித் தொகை தலா ரூ.3,00,000/க்கான காசோலைகளை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்.

மேலும் அனைத்து இணை ஆணையர்களும் தங்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள வணிகர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் ஜிஎஸ்டி தாக்கல் செய்வதை உறுதி செய்தல், உள்ளீட்டு வரி வரவு (ITC) மனுக்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தவறுகள் ஏதும் நடக்காமல் கண்காணித்தல், சரக்கு போக்குவரத்து வாகனங்களை சோதனை செய்து EWay Bill உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்த்து உரிய நடவடிக்கை எடுத்தல், அரசுத் துறைகள் GSTR 7 படிவங்கள் தாக்கல் செய்வதை உறுதி செய்தல், போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு அரசுக்கு வரி வருவாய் ஈட்டித் தர ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும் என அமைச்சர் பி.மூர்த்தி அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக

# ஆதிதிராவிடர் நலக்குழு அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

*விழுப்புரம், ஜன. 23 -* வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக்கூட்டம்

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட அமைப்பாளர் செல்வ பிரேம் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைக் கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் இன்று (23.01.2025- வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்ப ராஜ் முன்னிலையில் நடைபெறுகிறது.

தலைவர் வேலு ஜி, துணைத் தலைவர் இருசப்பன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஓம்சிவ சக்திவேல், எம்.ஆர்.இராஜிவ்காந்தி, தர்மலிங்கம் ஏழுமலை, சூப்பர் பழனி, திராவிட மணி உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் ஆதி திராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆதிதிராவிடர் நலக்குழு அணி செல்வ. பிரேம், விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி தலைவாசல் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட பிரதிநிதி தேவேந்திரன் வரவேற்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி (எ) க. பழனிச்சாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, குணசேகரன், வடக்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன், முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன், ஜெயபாலன், தலைமைக் கழகப் பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ், சார்பு அணி நிர்வாகிகள் பரமசிவம், கலியபெருமாள், கண்ணுசாமி, கருப்பையா, கிருஷ்ணன், அழகுவேல், தமிழ்ச்செல்வி, ரமேஷ், பாஸ்கரன், காசிலிங்கம், பொன்னுசாமி, பாலகிருஷ்ணன், அபிராமி சேட்டு, மாய கிருஷ்ணன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் ஏற்பாட்டில்

# மாற்றுக்கட்சியினர் 1300 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில்!

*கிருஷ்ணகிரி, ஜன.23-* கிருஷ்ணகிரியில், அ.தி.மு.க., நாதக பா.ஜ.க. மற்றும் பா.ம.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 1300பேர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்ற இணைப்பு விழாவில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில், நாம் தமிழர் கட்சி செய்தி தொடர்பாளர் கவுதமன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சூர்யா, பர்கூர் சட்டமன்ற தொகுதி தலைவர் சக்திவேல் மற்றும் காவேரிப்பட்டணம் நிர்வாகிகள் உள்ளிட்ட 1,000 பேர் இணைந்தனர். அதே போல அ.தி.மு.க. மீனவரணி ஊத்தங்கரை ஒன்றிய செயலாளர் ரத்னம் மற்றும் பாஜ மண்டல பொது செயலாளர் சங்கீதா தலைமையில், 300க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அவர்களை வரவேற்று அமைச்சர் சக்கரபாணி பேசுகையில், ‘பெண்ணுரிமைக்காக போராடிய பெரியாரை, நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான், யாருக்காகவோ விமர்சித்து பேசி வருகிறார். அதனால் தான் ஆயிரக்கணக்கான தம்பிகள். இன்று தி.மு.க.வில் இணைந்துள்ளீர்கள். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவாக்கிய இந்தியா கூட்டணி. நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் வென்றது. வரும் சட்டசபை தேர்தலில், 200 தொகுதிகள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்க ப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் இளைஞர்கள் வருகையால் அது கண்டிப்பாக உயரும். நீங்கள் அனைவரும் கடுமையாக உழைப்பீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் நாகராஜ்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம். பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் டாக்டர் மாலதி நாராயணசாமி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கிருஷ்ணமூர்த்தி, நரசிம்மன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், சுப்பிரமணி, மகேந்திரன், ராஜேந்திரன், அறிஞர், சாந்தமூர்த்தி, எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், குண.வசந்தரசு பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை வெங்கட்டப்பன் , பேரூர் கழக பொறுப்பாளர்கள், சாஜித் , பார்த்திபன் மற்றும் அன்பரசன் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## செல்லசேது.ரவிக்குமார் வரவேற்புரை!

# கொள்ளிடம் மேற்கு ஒன்றிய பி.எல்.ஏ.2, பி.எல்.சி. கலந்தாய்வு கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் சிறப்புரை! எம்.பன்னீர்செல்வம், எம்.தினேஷ்குமார் பங்கேற்பு!

*மயிலாடுதுறை, ஜன.23-* மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் மேற்கு ஒன்றிய தி.மு.க. பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கலந்தாய்வு கூட்டம் கொள்ளிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார்.

கொள்ளிடம் மேற்கு ஒன்றியச் செயலாளர் செல்ல சேது.ரவிக்குமார் வரவேற்றார்.

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக வழக்கறிஞர் அணி துண செயலாளரும், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் எம். தினேஷ்குமார் கருத்துரை வழங்கினார். கூட்டத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர் எம்.பி.கென்னடி, முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் முத்து குபேந்திரன் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக பாக நிலை முகவர்கள் (பி. எல்.ஏ.2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அகரம் பயின்ற திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நூற்றாண்டு விழா தொடங்கப்பட்டது. பள்ளி வளாகத்தில் நூற்றாண்டு தொடக்க விழா சுடர்பள்ளிக்கல்வித்துறை செயலாளர் எஸ்.மதுமதி, பொருளியல் அறிஞர், தமிழ்நாடு திட்டக்குழு செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன் மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உமதிவாணன்ஆகியோர் முன்னிலையில் ஏற்றப்பட்டது.உடன் மாநில விவசாய துணை செயலாளர் இரா.சங்கர் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராஜன், ஒன்றிய செயலாளர்கள் சோ.பா. பலர் வண்ணன், ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கேபழனியப்பன்,நகரக் கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோசிகுமார் இல. பழனியப்பன்,வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.